# வேதாகமத்தின் தனிச் சிறப்பு

"வேதாகமம் என்பது ஏவப்பட்ட பல புத்தகங்களில் ஒரு புத்தகம் ஆகும்'' என்ற கூற்றானது புத்தகங்களின் புத்தகத்தை இழிவு படுத்துவதற்கென்றே பயன்படுத்தப்படுகின்றது. இருந்தாலும், இப்படிப்பட்ட கூற்றொன்று ஆராய்ந்து பார்க்காதவர்களிடமே பயன்படுகின்றது.

முரண்பாடு என்பது ஒரு ஒப்பீடாக உள்ளதைப் பார்க்கிலும் நடைமுறையில் அதிகம் உள்ளது என்று கூறும் அளவுக்கு சமயத்தின் மற்ற புத்தகங்கள் (வேதாகமத்தைக் காட்டிலும்) அவ்வளவாய்த் தாழ்ந்த நிலையில் இருக்கின்றன. மற்ற மதப் புத்தகங்கள் எல்லாவற்றையும், பொருளடக்கம் மற்றும் மக்கள் வாழ்வில் செயல் விளவுகளை ஏற்படுத்துதல் என்ற கண்ணோக்கில் வேதாகமத்துடன் அருகருகே வைக்க முடியாது. நீங்கள் விரும்பினால் அவை எல்லாவற்றையும் உங்கள் (மேசையின்) இடது புறம் குவித்து வையுங்கள்; ஆனால் உங்களின் பரிசுத்த வேதாகமத்தை மட்டும் உங்கள் (மேசையின்) வலது புறம் வையுங்கள், அவை இரண்டிற்கும் இடையில் பெரிய (அகலமான) இடைவெளி ஒன்று இருக்கட்டும். கிறிஸ்தவத்திற்கும் மற்ற மார்க்கங்களுக்கும் இடையிலான தூரம் என்பது எல்லையற்றதாகும் என்று கூறப்படுகின்றது.

வேதாகமத்தின் அறுபத்தியாறு புத்தகங்களும் ஒரே நோக்கத்தில் பொருத்தப்பட்டது எப்படி என்பதை நாம் கண்டிருக்கின்றோம். அவைகள் சுமார் நாற்பது மனிதர்களால் எழுதப்பட்டிருந்தாலும், வியப்பூட்டும் ஒருமைப்பாட்டை வெளிக்காட்டுகின்றன. இதற்கு முரண்பட்ட வகையில், மற்ற மதங்களின் பரிசுத்தமானவை என்ற நிரூபணமற்ற புத்தகங்கள் ஒத்திசைவற்ற, புத்தகத் திரள்களாகவே இருக்கின்றன.

வேதாகம வரலாறு என்பது ஒருமைப்பாடும், அர்த்தமுள்ளதாகவும் இருப்பதோடு மட்டுமின்றி, அதில் உள்ள நூற்றுக் கணக்கான நிகழ்ச்சிகளில், எதிர்காலமானது தைரியத்துடன் முன்னுரைக்கப்படுகின்றது. தீர்க்கதரிசன வட்டாரத்தில், உண்மையான ஏவுதல் மற்றும் போலித்தனம் ஆகியவற்றிற்கு இடையில் விரைவானதொரு பிரிவினையை ஏற்படுத்தலாம் என்பது தெளிவானதாகும். வேதாகமத்துடன் மற்ற மதப் புத்தகங்களை அட்டவணைப் படுத்தும் எவரும் மற்ற புத்தகங்களில் தீர்க்கதரிசனங்கள் என்று எதையும் அட்டவணைப்படுத்தவில்லை, ஏனென்றால் தீர்க்கதரிசனங்கள் அவற்றில் இல்லை. இருந்தாலும், நூற்றாண்டுகள் மற்றும்

ஆயிரமாண்டுகளைக் கூட முன்னுரைத்திருந்த வேதாகமத் தீர்க்க தரிசனங்கள் ஆழமாகப் பதியும்படி நிறைவேற்றத்தை அனுபவித்துள்ளன.

நிரூபணமற்ற வேறு எந்தப் பரிசுத்த புத்தகத்தைக் காட்டிலும் வேதாகமம் சிறந்தது/மேம்பட்டது என்பதற்கு அதன் போதனையின் தன்மையானது இன்னொரு அடையாளமாகும். அட்டவணையானது (பக். 108, 109) ஹிந்துத்துவம், புத்தத்துவம், ஷிண்ட்டோயிஸம், ஜொராஸ்டிரியனிஸம், கன்ஃபியூஸியனிஸம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றின் சமய நூல்களினால் ஆதரிக்கப்படும் தனிச் சிறந்த போதனைகளைக் காண்பிக்கின்றது.

## உயர்வான ஒரு பிதா

வேதாகமம் மட்டுமே தெய்வீகத்தை பரிசுத்தமான, இரக்கம் நிறைந்த மற்றும் ஆர்வம்மிக்க ஒரு பிதாவாகச் சித்தரிக்கின்றது. வார்த்தையிலும் ஆவியிலும் உள்ள யோவான் 3:16ம் வசனம் வேதாகமத்தில் மட்டுமே உள்ளது. தேவனுடைய முழுநிறைவுப் பண்புகளின் கண்ணோட்டமானது வேதாகம மதத்திலும் மற்றும் அதிலிருந்து கருத்துப் பெற்றுக் கொண்ட அமைப்புக்களிலும் தவிர, வேறு எதிலும் காணப்படுவதில்லை.

வேதாகமத்திலும் (மற்றும் வேதாகமத்தின் செல்வாக்குள்ள மதங்களிலும் மாத்திரமே) தேவன் சுயாதீனமுள்ள இயல்புடையவராகக் கண்ணோக்கப் படுகின்றார். மற்ற மத அமைப்புக்களில், மிக மேலான தெய்வம் கூட தனது வல்லமையை, குறைவான தெய்வீகமுடையவைகளோடு பகிர்ந்து கொள்வதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு மதமுமே உயர்வானதொரு உண்மையைப் பேசினாலும் கூட, அந்த உண்மை/சத்தியமானது அன்பான நபராக நமது பிதாவினிடத்தில் உள்ளதென்று பேசுவது (வேதாகமம்) ஒன்று மட்டுமேயாகும்.

## உயர்வான ஒரு இரட்சகர்

வேதாகமம் மட்டுமே, சுயநலமற்ற ஒரு மூத்த சகோதரர் தம் சகோதர/சகோதரிகளுக்குப் பதிலாகத் தம்மையே கையளித்தது பற்றிச் சித்தரிக்கின்றது. ஒவ்வொரு மதமும் மனிதனின் உதவியற்ற நிலை பற்றிக் காண்பிக்கின்றது, ஆனால் ஒன்றே ஒன்று மட்டுமே தெய்வீக இரட்சகரைப் பற்றிக் கூறுகின்றது. மதத் தலைவர்கள் என்று அங்கீகாரம் பெற்றவர்களில், ஒரே ஒருவர் மட்டுமே தேவன் என்று உரிமைகோரும் அளவுக்கு உயர்ந்தவராய்/உயர்த்தப்பட்டவராய் இருக்கின்றார்.

#### உயர்வான ஒரு வாழ்க்கை

மனிதர்கள் எல்லாருக்கும் மாண்பை உயர்த்தக்கூடிய, மதிப்பிட முடியாத தகுதி பெற்ற உலகளாவிய சகோதரத்துவத்தை வேதாகமம் மட்டுமே சித்தரிக்கின்றது. மனிதரின் நோக்கத்திற்கான தாழ்மையான ஆனால் நம்பிக்கையின் நிச்சயத்தோடுள்ள கண்ணோட்டத்தை இது

*சித்தரிக்கின்றது. வேறு எந்த ஒரு நம்பிக்கை/மத அமைப்பும் இவ்வளவு ஒரு சுத்திகரிக்கப்பட்ட, நன்றியுள்ள பாவி(யாயிருந்தவர்) சந்தோஷம் உள்ள புத்திர சுவீகாரத்தையும், கதகதப்பான அன்புத் தொடர்பையும் பிதாவினிடம் பெற்றுக் கொள்வதைச் சித்தரிப்பதில்லை. ஒவ்வொரு மதமுமே, மனிதனின் சார்பு உணர்வினுடைய வெளிப்பாடாகவே இருக்கின்றது, ஆனால் ஒன்றே ஒன்று மட்டுமே தேவனுடன் ஐக்கியத்தைக் கொடுக்கின்றது.*

*மனித வாழ்வானது மதிப்பற்றதோ, தாழ்ந்ததோ அல்ல என்ற தனிச்சிறந்த கண்ணோட்டத்தை வேதாகமம் முன் வைக்கின்றது; தேவனுடைய வசனம் மட்டுமே வாழ்க்கை உண்மையிலேயே வாழத் தகுதியானது என்ற கருத்தை முன் வைக்கின்றது. மற்ற மதங்களின் நிரூபணமற்ற பரிசுத்த புத்தகங்கள் மிகப் பெரிய அளவு செல்வாக்கைச் செலுத்தியிருந்தாலும், செல்வாக்கின் வகையில் மாபெரும் வேறுபாடு உள்ளது. வேதாகமத்தின் மேலோங்கும், மாண்பு தரும் செயல் விளைவானது மற்ற மதங்களினால் உண்டாக்கப்படுவதில்லை. சித்தம், பரிசுத்தம், அன்பு மற்றும் ஜீவன் ஆகியவற்றின் கூறுகள் யூத மதம் மற்றும் கிறிஸ்தவத்தின் பண்புகளாய் இருக்கின்றன - அவை மறுஜென்ம வாழ்க்கையினால் விளைந்தவைகளாகும் - இவைகள் இந்த மதங்களை மற்ற எந்த மதத்தில் இருந்தும் வேறுபடுத்துகின்றன. மற்ற மதங்கள் (மனிதர்களை) மீட்சியடையச் செய்வதில்லை, ஆனால் தனிநபருக்கும், சமூக மாற்றுருவாக்கத்திற்கும் தடைகளாய் இருக்கின்றன. வேதாகமம் மட்டுமே தேவனுக்கு உண்மையான பரிசுத்தத்துடன் தனிப்பட்ட பக்தி செலுத்துதலை முன் வைக்கின்றது. இது இதன் ஆவிக்குரிய கண்ணோட்டத்தை மாண்புறச் செய்வதில் தனிச் சிறப்புள்ளதாயிருக்கின்றது. மற்ற மதங்கள் தீமைக்குப் பதில் நன்மை செய்யும் கொள்கையைப் போதித்துள்ளன, ஆனால் அவைகள் வேதாகமக் கிறிஸ்தவத்தில் உள்ளது போல அவ்வளவு தனிச் சிறப்பாகப் போதிப்பதில்லை. தேவனைப் பற்றிய வேதாகமத்தின் உயர்வான கண்ணோக்கமானது ஒழுக்கக் கோட்பாடுகளைத் தகுதியான விதத்தில் கொடுப்பதோடு, அவைகளைக் கடைப்பிடிப்பதற்கான மிக உயர்ந்த செயலாக்க நோக்கத்தையும் கொடுக்கின்றது.*

***உயர்வான ஒரு நித்தியம்***

*வரப் போகிற உலகத்தில், (இப்பொழுதுள்ள) இன்பம் நாடும் தன்மை மற்றும் புலன் உணர்வுகளுக்கு மேலான, நிறை வாழ்வு பற்றி வேதாகமம் மட்டுமே பேசுகின்றது. இவ்வுலகின் இன்பங்கள் மற்றும் பாடுகளுக்கு அப்பால் முடிவற்ற ஆவிக்குரிய மகிழ்ச்சி உள்ளது என்பதை வேதாகமம் மட்டுமே சித்தரிக்கின்றது.*

## *முடிவுரை*

*மற்ற மதங்களில் உள்ள நல்லதற்ற தன்மைகளில் இருந்து விலகியதாக,*

| உலகப் பெரும் மதங்களின் புத்தகங்களும் அவைகளின் உபதேசங்களும் | | | | |
|---|---|---|---|---|
| மதம் | மதப் புத்தகம் | தெய்வீகம் பற்றிய உபதேசம் | மனிதனுடைய உபதேசம் | எதிர்காலம் பற்றிய உபதேசம் |
| இந்துத்துவம் | வேதங்கள் | தேவர்களின் தீய தன்மை இயற்கை வழிபாடு பல தெய்வ வழிபாடு அனைத்தையும் வழிபடுதல் | ஜாதி அமைப்பு, இரந்துண்ணுதல், தண்டம், புண்ணிய யாத்திரைகள், தற்கொலை, பெண்களைத் தாழ்த்துதல் | மறுபிறவிக் கோட்பாடு |
| புத்த மதம் | திரிபிடகம் | நாத்திகம் | ஒழுக்கம், துறவு வாழ்வு, இணங்கச் செய்தல், மன்னிப்பு | நிர்வாணம் |
| ஷிண் டோயிஸம் | கோஜிக்கி | இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, அரசர் வழிபாடு | கன்ஃப்யூஸிய ஒழுக்கங்கள், விசுவாச குணமடைதல், தற்கொலை, அரசரின் சித்தம் | ஒன்றும் இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜொராஸ்ட்-ரியனிஸம் | ஜென்ட்-அவெஸ்ட்டா | பல தெய்வ வழிபாடு, இருமைத் தன்மை | வெறுப்புணர்வு, வாள் | பின்வரும் வாழ்வு |
| கன்ஃப்யூஸி-யனிஸம் | அரசன் | நாத்திகம், முன்னோர் வழிபாடு | ஒழுக்கத்தன்மை | ஒன்றும் இல்லை |
| இஸ்லாம் | குர்ஆன் | சட்டபூர்வ, விதிப்படியான, ஏகதெய்வ வழிபாடு | வாள், பல மனைவியைக் கொண்டிருத்தல், வெறுப்புணர்வு, பெண்களைத் தாழ்த்துதல் பாவம் தவிர்க்க முடியாதது | மனிதரின் உணர்வுப் பூர்வமான சொர்க்கம்/சுவனபதி |
| கிறிஸ்தவம் | வேதாகமம் | பிதாவுக்குரிய, ஒரு தெய்வ வழிபாடு | இரட்சிப்பு, புத்திர உரிமை, ஒரு மனைவியைக் கொண்டு வாழ்தல், அன்பு, தனிநபர் மதிக்கப்படுதல், இணங்கச் செய்தல், பரிசுத்தம் | ஆவிக்குரிய பரலோகம் |

*எந்த ஒரு மதத்திலும் காணப்படும் நல்ல தன்மை யாவும் கொண்டதாக, மற்ற எல்லா மதங்களைக் காட்டிலும் உயர்வானதாகக் கிறிஸ்தவம் இருக்கின்றது. கிறிஸ்தவத்தை மற்ற மதங்களுடன் வைத்து நோக்கும் பொழுது மட்டுமே அதன் மேன்மைத் தன்மை முழுமையாகக் காணப்படும். கிறிஸ்தவத்தை மற்ற மார்க்கங்களுடன் வகைப்படுத்தச் செய்யும் முயற்சியானது எப்பொழுதுமே தோல்வியடைகின்றது, இது வேதாகமக் கிறிஸ்தவம் தலை சிறந்ததாயிருப்பது எவ்விதம் என்பதைக் காட்டுகின்றது. உலகத்தைப் பற்றியும், தன்னைப் பற்றியுமான ஒருவரின் கண்ணோட்டங்கள் யாவும் - இந்த வாழ்விலும் மற்றும் இனி வரும் வாழ்விலும் உள்ளவை பற்றிய யாவையும் - அவரது ஆத்துமாவின்மேல் கிறிஸ்து கொண்டு வரும் விளைவினால் முற்றிலுமாக மாற்றப்படுகின்றன.*